ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1627/19 - 2009 නොවැම්බර් 10 වැනි අඟහරුවාදා - 2009.11.10
*1627/19 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.- பீ. 4/81* (V).

### *1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்*

### *பிரிவு 32 இன் கீழான ஒழுங்குவிதி*

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 32 (2) (ஏ) இன் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் கீழ் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

பாட்டலீ சம்பிக்க ரணவக்க,
சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர்.

கொழும்பு,
2009, செத்தெம்பர் 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2009 ஆம் ஆண்டின 1 ஆம் இலக்க தேசிய சூழல் (மாநகரத் திண்மக் கழிவு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) ஆளெவரும் -

(அ) ஏதேனும் தேசியப் பெருவழியின் அருகுகள் வழியாக மாநகரத் திண்மக் கழிவைக் கொட்டுதலாகாது ;

(ஆ) மத்திய சூழல் அதிகாரசபையினால் அல்லது அதற்கென அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் அல்லது ஆட்கள் குழுவினால் அத்தகைய நோக்கத்துக்காகப் பெயர் குறிக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த வேறேதேனும் இடத்தில் திண்மக் கழிவைக் கொட்டுதலாகாது.

(2) இவ்வொழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

3. ஆளெவரும், பி. ப. 6.00 மணியிலிருந்து மு. ப. 6.00 மணிவரையிலான மணித்தியாலங்களின் போது தவிர, தேசியப் பெருவழி நெடுகிலும் ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட இடத்திலிருந்து ஏதேனும் மாநகரத் திண்மக் கழிவைச் சேகரித்தலோ அல்லது சேகரிக்கச் செய்தலோ ஆகாது ;

ஆயின், மு. ப. 6.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரையிலான மணித்தியாலங்களின் போது, அந்தந்த வீடுகளிலிருந்து, அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் அல்லது ஆட்கள் குழுவினால் வீட்டுக் கழிவைச் சேகரித்தல் நிறைவேற்றப்படலாம்.

4. இவ்வொழுங்குவிதியின் நோக்கங்களுக்காக-

"சட்டம்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம் என்று பொருளாகும் ;

"மத்திய சூழல் அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொருளாகும் ;

"பெயர் குறிக்கப்பட்ட இடம்" என்பது, மாநகரத் திண்மக் கழிவைச் சேரிப்பதற்காக இயைபான உள்ளூரதிகார சபைகளினால் அடையாளங்காணப்பட்ட தற்காலிகச் சேகரிப்பிடங்கள் என்று பொருளாகும் ;

"மாநகரத் திண்மக் கழிவு" என்பது, வீடுகள், வர்த்தகத் தாபனங்கள் மற்றும் சமுதாய நடவடிக்கைகள் என்பவற்றிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட மனித மற்றும் விலங்கினச் செயற்பாடுகளிலிருந்து, விஞ்சுதலாகவுள்ள அல்லது பயனற்றதென அல்லது தேவையற்றதென அப்புறப்படுத்தப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட குப்பைகூளத்தை, குப்பையை அல்லது வேறுபட்ட திண்மப் பொருட்களை உள்ளடக்கும் ; அத்துடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலாகாது :-

(அ) 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி 1 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியினால் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவென விதித்துரைக்கப்பட்ட கழிவுப் பொருள் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் கைத்தொழில் நடைமுறையின் கழிவு அல்லது வெளியேற்றுகைகள், கமத்தொழிற் கழிவுகள், சாக்கடைக் கசடு மற்றும் மீள்சுழற்சிக்காக வேறுபடுத்தப்பட்ட மூலப்பொருட்கள்.

(மாநகரத் திண்மக் கழிவின் பொது ஆக்கக்கூறுகள், உணவு, கடதாசி, பிளாத்திக்குகள், உலோகங்கள், கண்ணாடித்துண்டுகள், தெருப்பெருக்கல்கள், தோட்ட அல்லது முற்றக் கத்தரிப்புகள் மற்றும் நானாவித சேதன மற்றும் அசேதனக் கழிவுகள் என்பனவாகும்.).

"தேசியப் பெருவழிகள்" என்பது, 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பொதுவழிகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11- 691

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.